சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 26.05.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 57/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-13 |
| சாட்சியின் பெயர் | : | ஜெயசுப்பிரமணியன் |
| தந்தை பெயர் | : | ஆறுமுகசாமி |
| கிராமம் | : | சென்னை |
| தாலுக்கா | : | சென்னை |
| தொழில் | : | காவல் கண்காணிப்பாளர் (ஓய்வு) |
| வயது | : | 63 |

2026 ம் ஆண்டு மே மாதம் 26 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 4 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 3 ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். **எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.**

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் திருவாரூர் மாவட்டத்தில் நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது கடந்த 10.07.2011 ம் தேதி 23.15 மணிக்கு பேரளம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக வீரபரஞ்ஜோதி என்பவர் நிலைய பொறுப்பிலிருந்த போது சாட்சி பக்கிரிசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.9 ஆன புகார்வாக்குமூலத்தை பெற்றுள்ளார். அந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலைய குற்ற எண். 275/2011-ல் இ.த.ச பிரிவுகள் 147, 148, 302 உ/இ ப.சா. & ப.ப (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(2)(va)-ன் கீழ் அ.சா.ஆ.10 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். மேற்படி வழக்கு பட்டியல் சமூகத்தினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமையிலிருந்து பாதுகாக்கும் சட்டத்தின் கீழான வழக்கு என்பதால் திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நன்னிலம் உட்கோட்ட காவல் சரக துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்த என்னை புலன் விசாரணை செய்ய வேண்டுமென காவல் கண்காணிப்பாளர் அவர்களின் அலுவலக நடவடிக்கை C.No.57/SJ&HR/TVR/2011, dated 10.07.2011-ன் கீழ் உத்தரவிட்டிருந்தார். அந்த உத்தரவு நகல் **அ.சா.ஆ-11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. இதனை தொடர்ந்து இவ்வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். உடனே சம்பவ இடம் சென்று சாட்சி பக்கிரிசாமி அ.சா.1 கணபதி, முத்துக்குமாரசாமி, அ.சா.2 பாஸ்கரன், அ.சா-3 கலைவாசன், அ.சா.4 ராஜகோபால், அ.சா.7 ஸ்டாலின், அ.சா.8 கங்காதரன், அ.சா.5 சின்னகுஞ்சு, கலியபெருமாள், அ.சா.6 R.T. செந்தில், கலியமூர்த்தி, மகேந்திரன், சிவபிரகாசம் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் கடந்த 10.07.2011 ஆம் தேதி 23.15 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்திலிருந்த சாட்சிகள் அ.சா.7 ஸ்டாலின் மற்றும் அ.சா.8 கங்காதரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர்

ஒன்றும், மாதிரி வரைபடமும் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ-12** ஆகவும், மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ-13** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

3. கடந்த 11.07.2011 ஆம் தேதி அதிகாலை 12.15 மணிக்கு 1 மணி வரை சம்பவ இடத்தில் கிடந்த இரத்தம் படிந்த மண் மாதிரிகள் மற்றும் அதே இடத்தில் இரத்தம் படியாத மண் ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். இரத்தம் படிந்த மண் **சா.பொ-1** ஆகவும், இரத்தம் படியாத மண் **சா.பொ-2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அந்த மகஜர் **அ.சா.ஆ-14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சான்று பொருட்களை படிவம் 95 **அ.சா.ஆ-15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி தேதியில் திருவாரூர் அரசு மருத்துமனைக்குசென்று காலை 7.00 மணிக்கு சென்று 9.00 மணிவரை சவக்கிடங்கில் கிடந்த இறந்து போன சாமிநாதன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்து தாரர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ-16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் மேற்படி இறப்பின் உண்மையான காரணங்கள் அறிய பிரேத பரிசோதனைக்காக சிறப்பு உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவமனை மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். மேற்படி தேதியில் சாட்சிகள் பக்கிரிசாமி, கணபதி, முத்துக்குமாரசாமி, சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் அ.சா-2 பாஸ்கரன், கலைவாசன், மற்றும் கூட்டு சதியினை நேரில் பார்த்த சாட்சி ராஜகோபால், பார்வை மகஜர் சாட்சி ஸ்டாலின், கங்காதரன் மற்றும் சாட்சிகள் சின்னகுஞ்சு, கலியபெருமாள், R.T, செந்தில், கலியமூர்த்தி, மகேந்திரன், சிவபிரகாசம் மற்றும் துரித முதல் தகவல் அறிக்கையை கொண்டு சென்ற முதல் நிலை காவலர் சோமசுந்தரம் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்னர் 12.07.2011 ஆம் தேதி பிற்பகல் 3.00 மணிக்கு கற்கத்தி பேருந்து நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்த எதிரிகள் காளீஸ்வரன், பரதன் மற்றும்

பிரகாஷ் ஆகியோர்களை கைது செய்து நிலையம் கொண்டு வந்து பின்னர் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 19.07.2011 ஆம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் ஆஜர்படுத்திய பிரேத விசாரணையின் போது கைப்பற்றிய இரத்தம் படிந்த சட்டை, இரத்தம் படிந்த வேஸ்டி, மற்றும் பச்சை நிற பெல்ட் ஆகியவைகளை தனி அறிக்கை மூலம் ஆஜர் படுத்தினார். அந்த இரததம் படிந்த சட்டை **சா.பொ-3** ஆகவும், இரதம் படிந்த வேஸ்டி **சா.பொ-4** ஆகவும், பச்சை நிற பெல்ட் **ச.பொ-5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அதனை படிவம் 95 ன் மூலம் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினேன். அந்த தனி அறிக்கை **அ.சா.ஆ-17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. படிவம் 95 **அ.சா.ஆ-18** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. பின்னர் நீதிமன்றத்தில் சரணடைந்த எதிரிகள் செல்வம் (எ) சித்திரை செல்வம், ராஜா (எ) இளஞ்செழியன், அப்பு (எ) கார்த்தி ஆகியோர்களை காவலில் எடுத்து விசாரிக்க நன்னிலம் நடுவர் நீதிமன்றத்திற்கு 19.07.2011 ஆம் தேதி விண்ணப்பித்து அனுமதி பெற்று அன்றைய தினம் மேற்சொன்ன எதிரிகளை காவலுக்கு எடுத்து நிலையத்தில் வைத்து சாட்சிகள் வீரையன், ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் ராஜா (எ) இளஞ்செழியன் என்பவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை மாலை 6.30 மணிக்கு பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் இறுதி பகுதியில் தன்னை அழைத்து சென்றால் இந்த சம்பவத்தின் போது பயன்படுத்திய அரிவாளை மறைத்து வைத்த இடத்தை காண்பித்து எடுத்து ஆஜர் படுத்துகிறேன் என்று கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் **அ.சா.ஆ-19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே தேதியில் அதே சாட்சிகள் முன்னிலையில் இரவு 8.00 மணிக்கு எதிரி அப்பு (எ) கார்த்தி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் இறுதி பகுதியில் தன்னை அழைத்து சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை மறைத்து வைத்துள்ள இடத்தை காண்பித்து எடுத்து ஆஜர்

படுத்துகிறேன் என்று தெரிவித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்க தக்க பகுதி **அ.சா.ஆ-20** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. மறுநாள் 20.07.2011 ஆம் தேதி அதிகாலை 6.30 மணியளவில் அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி செல்வம் (எ) சித்திரை செல்வம் என்பவரை விசாரணை செய்தபோது அவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தை பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் இறுதி பகுதியில் சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாளையும், தப்பி செல்ல பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் மறைத்து வைத்த இடத்தை காண்பித்து எடுத்து ஆஜர் படுத்துகிறேன் என்று கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்க தக்க பகுதி **அ.சா.ஆ-21** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 20.07.2011 ஆம் தேதி காலை 9.30 மணிக்கு திருமியச்சூர் பரமசிவம் தென்னந்தோப்பில் மேல்புறத்தில் எதிரி ராஜா (எ) இளஞ்செழியன் மறைத்து வைத்திருந்த சுமார் 60 செ.மீ நீளமுள்ள அரிவாள் ஒன்று. அதில் 7 செ.மீ மாட்டுக்கொம்பு கை பிடியும். சுமார் 8 செ.மீ இரும்பு பூனும், சுமார் 45 செ.மீ இரும்பு பாகமும் இருந்தது. மேற்படி அரிவாளில் இரத்த கரை காணப்பட்டது. அதை மேற்படி சாட்சிகள் வீரையன் மற்றும் ராமச்சந்தின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த அரிவாள் **சா.பொ-6** குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ-22** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மேற்படி சா.பொ-6 படிவம் 95ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன். அந்த படிவம் 95 **அ.சா.ஆ-23** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. அதே தேதி காலை 9.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் அதே இடத்தின் கீழ்புறத்தில் எதிரி அப்பு (எ) கார்த்தி மறைத்து வைத்திருந்த இடத்தை காண்பித்து எடுத்து ஆஜர் படுத்திய 40 செ.மீ நீளமுள்ள இரத்த கரை படிந்த பட்ட கத்தி ஒன்று. அதில் 12 செ.மீ மர கைப்பிடியும், 2 செ.மீ இரும்பு பூனும், 26 செ.மீ இரும்பு பாகம் உள்ளது. அதனை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மகஜர்

தாயர் செய்து கைப்பற்றினேன். அந்த பட்டாகத்தி **சா.பொ-7** குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ-24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மேற்படி சா.பொ-7 படிவம் 95 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன். அந்த படிவம் 95 **அ.சா.ஆ-25** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. மேற்படி தேதியில் காலை 10.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் திருமிச்சூர் பரமசிவம் தென்னதோப்பில் உள்ள கீத்து கொட்டகையின் பின்புறம் எதிரி செல்வம் (எ) சித்திரைசெல்வம் மறைத்து வைத்திருந்த இடத்தை காண்பித்து ஆஜர் படுத்திய 1) சிமெண்ட் கலர் இளம் பச்சை நிறம் உள்ள TN01AL0695 என்ற பதிவு எண் கொண்ட ஸ்டார் சிட்டி இரு சக்கர வாகனம் ஒன்று, 2) சுமார் 76 செ.மீ நீளமுள்ள இரத்தக்கரை படிந்த அரிவாள் ஒன்று. அதில் 12 செ.மீ மாட்டுக்கொம்பு கைப்பிடியும், சுமார் 2 செ.மீ இரும்பு பூனும், 62 செ.மீ இரும்பு பாகமும் உள்ளது. அதனை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மகஜர் தாயர் செய்து கைப்பற்றினேன். அந்த இரு சக்கர வாகனம் மற்றும் அரிவாள் **சா.பொ-8** குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ-26** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மேற்படி சா.பொ-8 படிவம் 95 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன். அந்த படிவம் 95 **அ.சா.ஆ-27** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். மேற்கண்ட சான்று பொருட்களை படிவம் 95 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பு வைத்து மேலும் கடிதம் மூலம் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டேன்.

10. இவ்வழக்கு சம்பவத்தில் இறந்து போன சாமிநாதன் என்பவருக்கும் மற்றும் 1 முதல் 7 எதிரிகளுக்கும் சாதி சான்றிதழ் கோரி நன்னிலம் வட்டாட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன் பேரில் இறந்து போன சாமிநாதன் என்பவர் இந்து பறைன் சமூகத்தை சேர்ந்தவர் என்பதற்குரிய

அ.சா.ஆ-6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சாதி சான்றிதழையும், 1ம் எதிரி இந்து துளுவ வெள்ளாளர் சமூகத்தை சேர்ந்தவர் என்றும், 2 முதல் 5 எதிரிகள் இந்து அகமுடையார் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதற்கான சாதி சான்றிதழ்களை பெற்றேன். அந்த சாதி சான்றிதழ்கள் **அ.சா.ஆ-28 முதல் 32** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் 6 மற்றும் 7 ஆகிய எதிரிகள் இந்து பறையர் சமூகத்தை சார்ந்தவர் என்பதற்கான அ.சா.ஆ-7 மற்றும் 8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சாதி சான்றிதழ்களையும் வட்டாட்சியர் அவர்களிடமிருந்து பெற்றேன். மேற்படி சான்றிதழ்கள் வழங்கி வட்டாட்சியர் அ.சா10 முருகையா, துணை வட்டாட்சியர் வீரையா ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

11. 18.08.2011 ஆம் தேதி பிரேத பரிசோதனை மேற்கொண்ட சிவபாலன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு அவரிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். அந்த பிரேத பரிசோதணை அறிக்கை **அ.சா.ஆ-33** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. இறந்து போன சாமிநாதனின் பிரேதத்தினை புகைப்படம் எடுத்த பொதுவேல் என்பவரை கடந்த 09.11.2011 தேதி அன்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து புகைப்படங்களை பெற்றேன். அந்த புகைப்படங்கள் **அ.சா.ஆ-34** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. மேலும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.12 வீரபரஞ்சோதி, முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு கொண்டு சென்ற முதல் காவலர் சோமசுந்தரம், வேதியியல் பகுப்பாய்வாளர் மோகன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். வேதியியல் பகுப்பாய்வு அறிக்கை மற்றும் குறுதியியல் பகுப்பாய்வு அறிக்கையும் நீதிமன்றத்திற்கு வரபெற்றுள்ளது. அந்த வேதியியல் பகுப்பாய்வு அறிக்கையானது **அ.சா.ஆ.35** ஆகவும், குறுதியியல் பகுப்பாய்வு அறிக்கையானது **அ.சா.ஆ.36** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

13. சாட்சி வீரையன் என்பவர் பேரளம் கிராம நிர்வாக அலுவலராகவும், அ.சா.9 ராமச்சந்திரன் பேரளம் கிராம நிர்வாக உதவியாளராகவும் பணிபுரிந்துள்ளனர். இத்துடன் விசாரணையை முடித்து கடந்த 09.11.2011-ம் தேதி வழக்கின் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அ.சா.2 பாஸ்கரன், அ.சா.3 கலைவாசன் ஆகியோர்கள் என்னுடைய விசாரணையில் எதிரிகள் குற்ற சம்பவத்தை செய்தபோது பார்த்ததாக கூறியுள்ளனர். அ.சா.4 ராஜகோபால் என்பவர் எனது விசாரணையில் எதிரிகள் கொலை செய்ய திட்டம் தீட்டினார் என்பது தொடர்பாக வாக்குமூலம் அளித்துள்ளார். அ.சா.6 செந்தில் என்பவர் சம்பவம் தொடர்பாக கேள்விபட்டதாக சொல்லியுள்ளார். அ.சா.7 ஸ்டாலின் மற்றும் அ.சா.8 கங்காதரன் ஆகியோர்கள் சம்பவ இடத்தில் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் செய்தபோது உடன் இருந்தனர் மற்றும் அவர்கள் அளித்துள்ள வாக்குமூலத்தில் அதனை கூறியுள்ளனர். அ.சா.9 ராமச்சந்திரன் என்பவர் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தபோது உடன் இருந்தார் மற்றும் பொருட்கள் கைப்பற்றும் போதும் அவர் உடன் இருந்தார் இது தொடர்பாக என்னுடைய விசாரணையில் அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** - இல்லை-

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.05.26 15:38:54 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.